| மாதிரி தேர்வு-4 வினாத்தாள்-II நவம்பர்-'2019 | பெயர் | | | |
|---|---|---|---|---|
| | தேர்வு எண் | | தேதி | |
| | வகுப்பு | X | பிரிவு | |
| தமிழ் | மதிப்பெண் | 100 | நேரம் | 3 மணி |

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிகோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் இந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I (மதிப்பெண்கள் : 14)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** **14x1=14**

1. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

அ. இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர் மார்ஷல் ஏ.நேசமணி

ஆ. சித்தூர் மாவட்டம் ஆந்திராவிற்குக் கொடுக்கப்படவில்லை

இ. அந்நாளில் திருவிதாங்கூர் சமஸ்தானம் தனி அரசாக இருந்தது.

அ. கூற்று ஆ, இ சரியானவை ஆ. கூற்று அ, இ சரியானவை

இ. மூன்றும் தவறு ஈ. மூன்றும் சரியானவை

2. சாகித்ய அகாதெமி விருது பெற்ற ம.பொ.சியின் நூல்

அ. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ஆ. மனுமுறைகண்ட வாசகம்

இ. எனது போராட்டம் ஈ. வானம் வசப்படும்

3. யாருடைய காலந்தொட்டு மெய்க்கீர்த்தி கல்லில் வடிக்கப்பட்டது.
அ. பல்லர் ஆ. பாண்டியர்
இ. முதலாம் இராசராசன் ஈ. இராஜேந்திர சோழன்
4. நாட்டுவதும் யாமோர் பாட்டுடையச் செய்யுள் என்றவர்
அ. பாரதியார் ஆ. கம்பர்
இ. இளங்கோவடிகள் ஈ. உமறுப்புலவர்
5. கோவலனையும் கண்ணகியையும் அழைத்துச் சென்றவர்
அ. கவுந்தியடிகள் ஆ. மாதிரி
இ. மாதவி ஈ. ஆயர்குலப் பெண்
6. இசைக்குக் கிடைத்த மகுடம் எனப் போற்றப்பட்ட விருது
அ. நோபல் பரிசு ஆ. தாமரை விருது
இ. மகசேசேவிருது ஈ. இந்தியமாமணி விருது
7. வெட்சி பூ இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ. மல்லிகைப் பூ ஆ. இட்லிப்பூ
இ. சங்குப்பூ ஈ. உன்னிப்பூ
8. மதுரையின் அவையம் பற்றிக் குறிப்பிடும் நூல்
அ. சிலப்பதிகாரம் ஆ. மதுரைக்காஞ்சி
இ. பரிபாடல் ஈ. மதுரைக் மும்மணிக்கோவை
9. "மீட்சி விண்ணப்பம்" கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்
அ. வேணுராம் ஆ. வேணுகோபாலன்
இ. சி.சு.செல்லப்பா ஈ. கபிலன்
10. கண்ணதாசன் எழுதிய முதல் திரைப்படப் பாடல்
அ. வாழ நினைத்தால் வாழலாம்
ஆ. கலங்காதிரு மனமே
இ. மலர்களைப் போல் தங்கை
ஈ. உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்
11. ஆண்டுக்கு ஒரு முறை மலர்வது
அ. பிரம்மகமலம் ஆ. செண்பகம்
ஆ. குறிஞ்சி ஈ. முல்லை
12. "பெருங்கதை" காப்பியத்தில் அமைந்த பா வகை
அ. அகவற்பா ஆ. வெண்பா
இ. கலிப்பா ஈ. நாட்டுப்பற்று

13. கலைப்பணி என்றாலே அதனுள் அடங்குவது

அ. மானுடம் ஆ. சமூகப்பார்வை

இ. நன்னெறி ஈ. நாட்டுப்பற்று

14. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று ______________ ______________ வேண்டினார்.

அ. கருணையன் எலிசபெத்துக்காக ஆ. எலிசபெத் தமக்காக

ஆ. கருணையன் பூக்களுக்காக ஈ. எலிசபெத் பூமிக்காக

பகுதி II (மதிப்பெண்கள்:18)

பிரிவு-1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4x2=8**

**21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

15. விடைகளுக்குகேற்ற வினாக்கள் அமைக்க.

அ. உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.

ஆ. வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக் கொண்டார்.

16. 'வாழ்வில் தலைக்கனம், 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

17. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

18. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" உவமை உணர்த்தும் கருத்து யாது?

19. குறிப்பு வரைக - அவையம்.

20. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

21. "உலகு"......... என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு-2

**எவையேனும் இந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10**

**28வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

22. ஊர்ப்பெயர்களின் மருஉவை எழுதுக.

அ. மயிலாப்பூர் ஆ. நாகப்பட்டினம்

www.Padasalai.Net

23. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரி அமைத்து எழுதுக.
அ. அள்ளி இறைத்தல் ஆ. மனக்கோட்டை

24. உவமையைத் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
அ. தாமரை இலை நீர் போல ஆ. சிலை மேல் எழுத்து போல

25. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.
அ. பிண்ணாக்கு ஆ. வருந்தாமரை

26. கலைச்சொல் எழுதுக.
அ. Revivalism ஆ. Humanism

27. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.
சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக. - 'ஒலித்து'

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. "முதல் மழை விழுந்ததும்" என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுடன் தருக.

31. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

32. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்', 'அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்' மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப்பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சி செய்வதற்கும் அமைச்சரும் உதவினர். நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறார்.

**வினாக்கள்**

அ. அரசனின் கடமை யாது?

ஆ. ஊன் பொதிப பசுங்குடையார் கூறுவது யாது?

இ. அமைச்சரின் கடமை யாது?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**
**36வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

33. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது - இடஞ்சுட்டிக் பொருள் தருக.

34. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"
இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

35. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

36. அடிபிறழாமல் எழுதுக.

அ. "மாற்றம் என்பது" ...... எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ. "நவமணி வடக்கே"...... எனத் தொடங்கும் தேம்பாவணி பாடலை எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

37. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

38. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதி நுட்பம்
யாவுள முன் நிற்பவை.
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

39. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துகாட்டுக.

40. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;

**வினாக்கள்**

அ. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

ஆ. இப்பாடலின் ஆசிரியர் யார்?

இ. வண்ணமும் சுண்ணமும் என்பதன் இலக்கணக் குறிப்பு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள்:20)

**அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5x4=20

41. படம் உணர்த்தும் கருத்தை நயமுற நான்கு தொடர்களில் எழுதுக.



______________________

______________________

______________________

______________________

______________________

______________________

42. மேல்நிலை வகுப்பில் சேர விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

43. பின்வரும் பத்தியைப் படித்து மையக் கருத்தை எழுதுக.

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி,அவன் தன்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

44. மொழி பெயர்க்க.

1. Education is what remains after one has forgotten what one has learned in School. - Albert Einstein

2. Tomorrow is often the busiest day of the week, - Spanish proverb

3. It is during our darkest moments that we must focus to see the light - Aristotle

4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. Winston Churchill.

(அல்லது)

தமிழில் மொழிபெயர்க்க.

i. Little drops of water make the mighty ocean.

ii. Live and let live.

iii. No man can serve two masters.

iv. Practise makes man perfect

45. மனித நேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதை எட்டு வரி எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள்:30)

**எவையேனும் இந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5x6=30**

46. காலக் கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக! - கண்ணதாசன்

www.Padasalai.Net

47. கருணையின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

48. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வாணிக வீதிகளை இக்கால வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

49. அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையின் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

50. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

51. பள்ளித்திடலின் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கம் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

www.Padasalai.Net